[4th March 1958

SRI M. P. SUBRAMANIAM : இரண்டு ஆண்டுக்கு முன்பாகவே இந்த மலைவாசிகளுடைய நன்மையை உத்தேசித்து கூட்டுறவு சங்க விற்பனை நிலையம் ஒன்றை மலை அடிவாரத்தில் ஏற்படுத்தவேண்டுமென்று அரசாங்கத்திற்கு விண்ணப்பம் வந்திருப்பது அமைச்சருக்குத் தெரியுமா ? அப்பேர்ப்பட்ட இனத்தவர்களுடைய பொருளாதார நிலையை உயர்த்துவதற்கு அடிவாரத்தில் விற்பனை நிலையம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முயற்சி செய்யுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இரண்டு வருஷமாகப் பரிசீலனையில் இருப்பதாகச் சொல்வது நாணய சங்கம் வைப்பதற்காகத்தான். அதை வைப்பதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். இது வரையிலும் யாரும் சர்க்காரிடத்தில் இதைப்பற்றிச் சொன்னதாகத் தெரியவில்லை.

Burialground at Puliyanthopu

* 197 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state the reasons for providing separate burial places for different castes in the burial-ground in Puliyanthopu, Madras?

THE HON. SRI M. A. MANICKAVELU : Separate places have not been reserved in the Pulianthopu cremation ground for different castes.

SRI V. K. KOTHANDARAMAN : பத்து ஆண்டு சுதந்திரத்திற்குப் பிற்பாடும் செத்த பிணத்திற்கு சுடுவதற்கு இடம் இல்லாத நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறது என்று சொன்னால், உயர்ந்த சாதிக்காரர் தாழ்ந்த சாதிக்காரர் என்கிற பாகுபாடு பிணத்திற்குக் கூட இருக்கிறது என்றால். . . .

MR. SPEAKER : நீங்கள் கேள்வியைப் போடாமல் பிரசங்கம் செய்தால் என்ன செய்வது ? உட்காருங்கள். அவர்தான் இல்லை என்று சொல்லி விட்டாரே.

SRI K. VINAYAKAM : Is it not a fact, Sir, that separate burialgrounds are provided for communities like Hindus, Muslims and Christians because different kinds of burial rituals are performed by the communities concerned?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்தக் கேள்வி புளியந்தோப்பு மயானத்தைப் பற்றியது. அங்கே இந்த மாதிரி பாகுபாடு முன்பு இருந்ததாம். இப்போது இல்லை.

SRI S. PAKKIRISAMI PILLAI : இந்த இடம் சுடும்படியான இடம். மிகவும் நெருக்கடியான இடமாதலால் அங்குள்ள பிணம் சுடும் மயானத்தை உடனடியாக வேறு இடத்திற்கு அப்புறப்படுத்துவதற்கு கார்ப்பரேஷன் அதிகாரிகளுக்கு அரசாங்கம் உத்தரவிடுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : கனம் அங்கத்தினர் சொல்வது வேறு விஷயம். அதைப்பற்றித் தனிக் கேள்வி போட்டால் பதிலளிக்கலாம்.

MR. SPEAKER : Questions are over.